## "வெல்வோம் 200 – படைப்போம் வரலாறு" என்பது மட்டுமல்ல

# இந்தியாவிற்கே வழிகாட்டியாக நமது முதல்வர் வரப்போகும் நாள் வெகுதூரத்தில் இல்லை!

## சென்னை தெற்கு – கலைஞர் நகர் தெற்குப் பகுதியில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் நடைபெற்ற முதல்வர் பிறந்தநாள் விழாவில் – இயக்குனர் கரு.பழனியப்பன் உறுதி!

சென்னை,மார்ச்.21-

**சென்னை தெற்கு மாவட்டம் கலைஞர் நகர் தெற்குப் பகுதி சார்பில் நடைபெற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவில் இயக்குனர் கரு.பழனியப்பன் பேசும் போது, "வெல்வோம் -200 படைப் போம் வரலாறு என்பது மட்டுமல்ல இந்தியாவிற்கே வழிகாட்டியாக நமது முதல்வர் வரப் போகும் நாள் வெகு தூரத்தில் இல்லை" என்று கூறினார்.**

**சென்னை தெற்கு மாவட்டம் சார்பில் நடைபெற்ற முதலமைச்சரின் 72 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவில் திரைப்பட இயக்குநர் கரு.பழனியப்பன் ஆற்றிய உரை வருமாறு:**

ஒரு மனிதனிடம், உன்னுடைய நண்பர்களைப் பற்றி பேசு என்று சொன்னால், இரண்டு நாள்கள், மூன்று நாள்கள் பேசுவான். உன்னுடைய ஆசிரியர்களைப்பற்றி பேசு என்றால், நல்லாசிரியர்கள் இருந்தால், கூடுதலாக நான்கு நாள்கள் பேசுவான்.

உன்னுடைய உறவினர்களைப்பற்றி பேசு என்று சொன்னால், சித்தப்பா, மாமா, அத்தை ஆகியோரைப் பற்றி பேசுவான். உன்னுடைய தாத்தா, பாட்டியைப் பற்றி பேசு என்று சொன்னால், இன்னும் கூடுதலாக 10 நாள்கள் பேசுவான்; ஏனென்றால், சின்ன வயதிலிருந்து வளர்த்தினால்.

ஆனால், அம்மாவைப்பற்றி பேசு என்று சொன்னால், சலிப்பின்றி தன்னுடைய வாழ்நாள் முழுவதும் பேசிக்கொண்டே இருப்பான். ஏனென்றால், அவனுடைய வாழ்க்கை முழுமையும் நிறைந்திருக்கும் பெண் என்பது அவனுடைய அம்மாதான்.

அப்படி, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அத்துணை பேரும், தங்களுடைய தாயாக நினைக்கும் திரு. தலைவர் ஸ்டாலின் அவர்களைப்பற்றி இப்படித் தொடர்ச்சியாகப் பிறந்த நாள் கூட்டங்களைப் போட்டு, தமிழ்நாடு முழுவதும் பேசுவது என்பது மிகவும் நேசத்திற்குரிய ஒரு தலைவரைப் பெற்ற தொண்டர்கள் செய்கின்ற காரியமாகத்தான் நான் பார்க்கின்றேன்.

எல்லா கூட்டங்களிலும் ஒரு முழக்கம் வைக்கப்படுகிறது. அது என்னவென்றால்,

"வெல்வோம் 200 – படைப்போம் வரலாறு" என்பது தான் அது.

அப்படி ஒரு வரலாறை படைப்போம். அடுத்த ஆண்டு வரப்போகும் சட்டப்பேரவைத் தேர்தலில்.

### தொகுதி மறுசீரமைப்பு!

இந்தச் சூழ்நிலையில் நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது – பாண்டிச்சேரி உள்பட தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட 40 நாடாளுமன்ற தொகுதிகளுக்கும் குறைவு வந்துவிடுமோ என்கிற அச்சம் முதன்முதலில் மக்கள் தொகை வாக்கெடுப்பை வைத்து நடந்துவிடுமோ என்று இருந்தது. அதுபோன்று நடப்பதற்கு வாய்ப்பு இல்லை.

ஏனென்றால், இந்தியாவில் 1973 ஆம் ஆண்டிலிருந்து இந்த எண்ணிக்கை மாறாமல் இருக்கின்றது. 2021 ஆம் ஆண்டில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பை நடத்தியிருக்கவேண்டும். கொரோனா தொற்று ஏற்பட்ட காரணத்தினால், மக்கள் தொகைக் கணக்கெடுப்பை நடத்தவில்லை. அதனால், நாடாளுமன்றத் தொகுதி எண்ணிக்கை குறைந்துவிடுமோ என்று சொன்னவுடன், நம்முடைய முதலமைச்சர் அவர்கள், மார்ச் மாதம் 5 ஆம் தேதி, இந்தியாவில் உள்ள அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கும், தலைவர்களுக்கும் ஓர் அழைப்பு விடுக்கிறார்.

### 15 நாட்களில் மிகப் பெரிய சாதனை!

அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெறுகிறது. கூட்டத்தின் முடிவில் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது – மற்ற மாநிலங்களிலிருந்து முதலமைச்சர்களை அழைத்து கூட்டம் நடத்தவேண்டும் என்று.

மார்ச் 5 ஆம் தேதி நிறைவேற்றப்பட்ட தீர்மானப்படி, பணி தொடங்கப்பட்டு, முதலமைச்சருடைய வழிகாட்டுதலின்படி, அமைச்சர்கள் பலரும் பல்வேறு மாநிலங்களுக்குச் சென்று, பல்வேறு தலைவர்களைச் சந்தித்து, முதலமைச்சரின் அழைப்புப்பற்றி கூறுகிறார்கள்.

மிகச் சரியாக 15 நாள்களில், சென்னையில் இந்தியாவில் இருக்கும் 22 கட்சித் தலைவர்கள் ஒன்றுகூடி, தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில், ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக கூட்டம் நடத்துகின்ற சாதனை என்பது மிகச் சாதாரணமானதல்ல.

அண்ணன் மா.சு. அவர்கள் சொன்னார், "வெல்வோம் 200 – படைப்போம் வரலாறு" என்று.

எனக்குத் தெரிந்து பா.ஜ.க.காரன், தலைவரை பிரதமராக்குவதற்கு முடிவு செய்துவிட்டார்கள். நாம்தான் முதலமைச்சராக்குவதற்கான வேலையைப் பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

ஒரு தலைவர், கிட்டத்தட்ட 15 நாள்களில், இந்தியாவில் உள்ள எல்லா தலைவர்களையும் ஒன்று திரட்டப்பட முடியும் என்றால், இப்பொழுது இந்தியாவின் கவனம் முழுவதும் தமிழ்நாட்டின் பக்கம் திரும்பிவிட முடியும்.

உழைப்பால் உயர்ந்த முதலமைச்சர்!

தலைவர் கலைஞருக்கும், நம்முடைய தலைவர் முதலமைச்சர் ஸ்டாலினுக்கும் ஒரு வேறுபாடுதான் இருந்தது. அது என்னவென்றால், இதுவரையில், மொழியாலும், பேச்சாலும், எழுத்தாலும் பெரிதும் கவர்ந்து பெற்ற இடத்தை, நம்முடைய முதலமைச்சர் உழைப்பால் பெற்றிருக்கின்றார்.

இதை அவரே சொல்லியிருக்கின்றார், நான் என் தலைவரைப் போல, தமிழிலும், எழுத்திலும், பேச்சிலும் சிறந்தவன் அல்ல; எனக்குத் தெரிந்ததெல்லாம், உழைப்பு, உழைப்பு, உழைப்பு மட்டுமே என்றார்.

அதை செய்துகொண்டே இருந்தார்.

### கலைஞர்தான் எப்போதும் செய்தியாக இருப்பார்!

கலைஞரைப்பற்றி என்ன பேசப்பட்டது என்றால், இந்தியாவில், கலைஞர்தான் எப்பொழுதும் செய்தியாக இருப்பார். கலைஞர்தான் செய்தியை உருவாக்குவார் என்று.

அந்த இடத்தை, வேறு எந்தத் தலைவரும் அடையவில்லை. இப்போது அந்த இடத்தைத் தொட்டிருக்கின்றார் முதன்முதலாக நம்முடைய தலைவர் ஸ்டாலின் அவர்கள்.

கடந்த 10 நாள்களாக இந்தியாவின் செய்தியாக மு.க.ஸ்டாலின் அவர்கள்தான் நிற்கிறார்கள். ரூபாய் என்று மாற்றியதிலிருந்து அனைத்துக் கட்சிக் கூட்டம் வரையில்.

இப்படி வேலை செய்கின்ற ஒருவரைக் கொண்டாடி, பிறந்த நாள் வாழ்த்துச் சொல்லிப் பாராட்டுகின்றோம் அல்லவா – ஏன் இதையெல்லாம் செய்யவேண்டி இருக்கின்றது என்றால், இந்த மாநிலத்தை மதவாதம் பற்றிக் கொள்ளாமல் காப்பாற்றிக் கொண்டிருக்கின்ற ஒரு தலைவராக, ஒரு முதலமைச்சராக இருப்பதால்தான் கொண்டாடுகின்றோம்.

அதற்கு ஓர் உதாரணம் சொல்லவேண்டும் என்றால், மகாராட்டிராவில் அவுரங்கசீப் என்கிற ஒரு மன்னனைப் பற்றி நாமெல்லாம் படித்திருக்கின்றோம். அவருடைய பெயரால், அவுரங்கபாத் என்ற ஒரு ஊர் இருந்தது. அந்த ஊரின் பெயரை பாரதிய ஜனதா கட்சி மாற்றிவிட்டது. சத்ரபதி சாம்பாஜி நகர் என்று மாற்றப்பட்டது. அதன்பிறகு, இப்போது ச்சாவா என்கிற இந்தித் திரைப்படத்தில், சிவாஜி மன்னனைப்பற்றி எடுக்கப்பட்டது. அந்தத் திரைப் படத்தைப்பற்றி மகாராட்டிரா சட்டப்பேரவையில் விவாதம் நடைபெற்றது. அப்போது, அங்கிருக்கும் அவுரங்கசீப்பின் நினைவிடத்தை அகற்றவேண்டும் என்று முதன்முதலாக பஜ்ரங் தளமும், விசுவ இந்து பரிஷத்தும் பேசுகிறது.

### மராட்டியத்தில் அமைதி குலைந்தது!

அப்படி பேசுகின்றபொழுது, அந்த நேரத்தில், இப்படியெல்லாம் பேசக்கூடாது என்று சொல்லக்கூடிய ஒரு மாநிலத்தின் முதலமைச்சர், பட்னாவிஸ், "ஆமாம், அகற்றுவோம்" என்று சொல்லியிருக்கிறார்.

அதனுடைய விளைவாக, மகாராட்டிர மாநிலத்தின் அமைதி குலைந்தது.

நாங்கள் ராமர் கோவில் கட்டியதைப்போல, பாபர் மசூதியை இடித்ததுபோல, அவுரங்கசீப் நினைவிடத்தை இடிப்போம் என்று சொல்லி, மாநிலம் தழுவிய ஒரு போராட்டத்தினை விசுவ இந்து பரிஷத்தும், பஜ்ரங் தள் அமைப்பும், இன்றைக்கு பா.ஜ.க.வினுடைய ஆதரவோடு அறிவிக்கின்றன.

இன்றைக்கு நாக்பூர் பற்றி எரிந்துகொண்டிருக்கின்றது. அங்கே தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது.

உங்களுக்குப் புரியும் வகையில் சொல்கிறேன், எப்படி சென்னை, திருச்சி, திருநெல்வேலி இருக்கின்றதோ, அதுபோன்று, மகாராட்டிராவில் மும்பை, நடுவில் அவுரங்கபாத், கடைசி ஓரத்தில் நாக்பூர், குறுக்கே இழுத்துப் பார்த்தால், 700 கிலோ மீட்டர் வரும்.

700 கிலோ மீட்டர் மொத்தமும் மகாராட்டிரா பற்றி எரிவதற்கான வேலையை பஜ்ரங்தள் செய்கிறது; பி.ஜே.பி. அதனை ஆதரிக்கிறது.

### திருப்பரங்குன்றத்தில் ஏற்பட்ட நிலை என்ன?

இப்படி ஒரு சூழல், தமிழ்நாட்டில், மதுரையில், திருப்பரங்குன்றத்தில் ஏற்பட்டபொழுது, ஆயிரம் பேரை ஊரை விட்டு வெளியேற்றி, இந்த மாநிலத்தில் மக்கள் நிம்மதியாக வாழ்வதற்குரிய சூழ்நிலையை திரு. ஸ்டாலின் அவர்கள் ஏற்படுத்தினாரே, அதுதான் மிகவும் முக்கியம்.

மலைமேல் மசூதி இருந்தது; தர்கா இருந்தது; அதை மாற்று என்று சொன்னபொழுது, அது நீண்ட காலமாக இருக்கிறது. நீ உன்னுடைய வேலையைப் பார் என்று சொல்லி, அனுப்பினார்.

இங்கே எந்த மதவாத சக்தியும் தலைதூக்காமல், தமிழ்நாட்டு மக்கள் சகோதர எண்ணத்தோடு தொடர்ச்சியாக வாழ்வதற்குத் தலைவர் ஸ்டாலின் அவர்கள் ஒரு காரியத்தைச் செய்கிறார் என்றால், தமிழ்நாட்டு மக்களும் அதற்கு உறுதுணையாக இருக்கிறார்களே ஏன் என்கிற கேள்வி எழுகிறது.

மற்ற மாநிலங்களில், பா.ஜ.க. என்ன சொல்கிறதோ,அதனைக் கேட்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டில் உள்ள மக்கள் மட்டும், பா.ஜ.க. சொல்வதைக் கேட்காமல் இருக்கிறார்கள் தெரியுமா?

ஏனென்றால், கடந்த 70 ஆண்டுகாலமாக தொடர்ச்சியாக, படிப்பு முக்கியம், படிப்பு முக்கியம் என்று சொல்லி, எல்லோரையும் படிக்க வைத்ததால்தான்.

தமிழ்நாட்டில் மட்டும், பாரதீய ஜனதாவின் எந்த செயல் திட்டமும் செயல்படமாட்டேன் என்கிறது; எந்தத் துரோகத் திட்டமும் செயல்படமாட்டேன் என்கிறது; எந்த விஷமப் பிரச்சாரம் எடுபடமாட்டேன் என்கிறது.

அண்ணன் மா.சு. அவர்கள் பல கூட்டங்களை நடத்தும்போது, ஒரு கூட்டத்தில், ரங்கராஜ் பாண்டேவை அழைத்து நடத்திவிட்டார். சமூக வலைதளத்தில் அத்துணை பேரும் கண்டித்தார்கள். அவரை அழைத்துக் கூட்டம் நடத்தலாமா? என்று.

நான் சொல்கிறேன், நீங்கள் அவரை அழைத்தது சரிதான். நாம் கூப்பிடத்தான் வேண்டும். அங்கேதான் நாம் மேன்மையான ஆளாக ஆகின்றோம்.

### பெரியாரிடமிருந்து வந்தது!

எங்களிடம் எதிர்த்துப் பேசுவதற்குக் கருத்து இருக்கிறது. நீ வந்து கடை விரி; மேடையில் வந்து சொல்.

மேடையில் வந்து அவர் என்ன சொன்னார், அழுது புலம்பி, "நீங்கள் எல்லாம் நன்றாக இருக்கிறீர்களே?' என்று. அண்ணன் மா.சு. அவர்களுக்குத் தெரியுமா? ரங்கராஜ் பாண்டே அழைத்தது எங்கே இருந்து வந்தது என்று தெரியுமா? அது பெரியாரிடமிருந்து வந்தது.

பெரியாரை எதிர்த்துப் பேசினால், மேடையில் வந்து பேசுவார்.

பெரியார்போல, எதிர்க்கருத்துப் பேசுபவர்களை அழைத்து மேடையில் அமர வைத்து, பேச வைத்த ஆளே உலகத்தில் வேறு இல்லை.

பெரியாரை ஆதரித்துப் பேசுகிறவர்களைவிட, எதிர்த்துப் பேசுகின்றவர்களை மேடைக்கு அழைப்பார். அவரை அழைத்து பேச வைத்துவிட்டு, அதற்கு மாறாக, நம்முடைய கருத்தைப் பேசுவார்.

அதுபோலத்தான் நம்முடைய மா.சு. அண்ணன் அவர்கள், ரங்கராஜ் பாண்டேவை அழைத்திருக்கின்றார். முடிந்தால், அண்ணாமலையையும் ஒரு கூட்டத்திற்கு அழையுங்கள்.

ரங்கராஜ் பாண்டே சின்ன அண்ணாமலை; அண்ணாமலை, பெரிய ரங்கராஜ் பாண்டே.

இங்கே வந்து பேசிவிடுவாரா, அண்ணாமலை?

அப்படியே இங்கே வந்து பேசட்டும் அண்ணாமலை. மேடையில் வந்து மூன்றாவது மொழியை நீங்கள் படியுங்கள் என்று.

அப்படியே பேசினாலும், அதற்கு மா.சு. அண்ணன் பதில் சொல்வார் அல்லவா!

### தமிழ்நாட்டில் மட்டும் மும்மொழியா?

இந்தியாவில் யாருமே படிக்கமாட்டார்களாம் மூன்றாவது மொழியை. ஆனால், தமிழ்நாட்டில் உள்ளவர்கள் மட்டும் படிக்கவேண்டுமாம்.

உங்களுக்கு எளிதாகப் புரியவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். நிறைய பெண்கள் இங்கே கூடியிருக்கின்றீர்கள்.

நாம் படிப்பை ஆரம்பித்தது, நூறாண்டுகளுக்கு முன்பு. திண்ணைப் பள்ளிக்கூடத்தில் விட்டபோது, நமக்குப் படிப்பு இரண்டுதான். ஒன்று தமிழ். கீழே மண்ணைக் கொட்டி, அ, ஆ என்று எழுதுவது. இரண்டாவது, எண். அதனால்தான் எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.

அய்ந்தாம் வகுப்புவரையில், 12 வயது வரையில், மொழியும், எண்ணும்தான் படித்தார்கள். அதற்குப் பிறகு மெதுவாக வரலாறை சொல்லிக் கொடுத்தார்கள். அதற்குப் பிறகு புவியியல், அதற்குப் பிறகு இயற்பியல் என்று மெது மெதுவாக கொஞ்சம் கொஞ்சமாகச் சொல்லிக் கொடுத்தார்கள்.

ஆனால், இன்றைக்கு என்ன செய்கிறோம்?

அய்ந்தாம் வகுப்புப் படிக்கின்ற பிள்ளைக்கு, இயற்பியல், வேதியியல், தாவிரவியல், உயிரியலைச் சொல்லிக் கொடுக்கின்றோம்.

அய்ந்தாம் வகுப்புப் படிக்கின்ற பிள்ளைக்கு, ஸ்பானீஷ் சொல்லிக் கொடுக்கின்றேமா? பிரெஞ்சு சொல்லிக் கொடுக்கின்றோமா? வங்காளம் சொல்லிக் கொடுக்கின்றோமா?

ஏனென்றால், மொழி அறிவு கிடையாது. பாடம்தான் அறிவு – பொருள்தான் அறிவு.



அதனால்தான், இன்றைக்கு பட்ஜெட்டில், ஆர்ட்டிபிசியல் இன்டலிஜென்ஸ் சொல்லிக் கொடுக்கப் போகின்றோம் என்பதை, பிரபாகரராஜா சட்டப்பேரவை உறுப்பினர் பெருமையாகச் சொன்னார்.

நாங்கள் இன்னொரு பாடத்தைச் சொல்லிக் கொடுக்கின்றோம். அந்தப் பாடத்தை நன்றாகப் படித்தால், பின்னாளில், அவசியம் ஏற்படும்பொழுது, மொழியைப் படித்துக் கொள்வார்கள்.

இன்றைக்கு நம் வீட்டிலிருந்து எல்லா பிள்ளைகளும் வெளிநாட்டிற்குச் சென்றிருக்கின்றார்களோ, உலகம் முழுவதும் இருக்கிறார்களே, அங்கே இருப்பவர்கள் எப்படி பேசுகிறார்கள்? அங்கே சென்றதால் பேசுகிறார்கள்.

பீகாரிலிருந்து இங்கே மேசை தொடக்க வந்திருக்கிறார்களே, அவர்களிடம் நாம் இந்தியிலா பேசுகிறோம்? அவன்தானே, தமிழில் பேசுகிறான்.

மும்மொழிக் கொள்கையில் அவன் தமிழ் மொழியைப் படித்துவிட்டு வந்தானா? இல்லையே!

தமிழ்நாட்டிற்குச் சென்றால், தமிழ் மொழி தெரிந்தால்தான் வேலை செய்ய முடியும் என்றா வந்தான். பிழைக்க வந்த இடத்தில், வேலை செய்தான். வேலை செய்த இடத்தில், மொழியைக் கற்றுக்கொண்டால்தான், நம்மை இந்தப் பணியில் வைத்திருப்பார்கள் என்பதால், தமிழ் மொழியைக் கற்றுக்கொண்டான்.

அப்படி, யாருக்குத் தேவையோ, அப்பொழுது தேவையான மொழியைப் படிக்கப் போகிறார்கள்.

தேவையில்லாமல், அரசு பள்ளிக்கூடத்தில் படிக்கின்ற பிள்ளைகள், இந்தி மொழியைப் படிக்கவேண்டாமா? மூன்றாவது மொழியைப் படிக்கவேண்டாமா? என்று கேட்டார்கள் என்றால், படிக்கவேண்டாம் என்று சொல்லுங்கள்.

### பேறறிஞர் அண்ணாவின் இரு மொழிக் கொள்கை!

நமக்கு, பேரறிஞர் அண்ணா சொல்லிக் கொடுத்த இருமொழிக் கொள்கை இருக்கின்றன. நமக்குத் தமிழும், ஆங்கிலமும் இந்த மாநிலத்தில் மிகவும் வளமையாக இருக்கிறது. அதனால், எங்களுக்கு மூன்றாவது மொழி வேண்டாம். மூன்றாவது மொழி வேண்டும் என்பவர்கள் படித்துக் கொள்ளலாம்.

இங்கே இந்திப் பிரச்சார சபா இருக்கிறது; பிரெஞ்சு கிளாஸ் இருக்கிறது. யார் வேண்டுமானாலும் படிக்கலாம்.

ஆனால், பள்ளிக்கூடத்தில் ஒரு மொழியைச் சேர்ப்பது என்பது, அங்கே படிக்கின்ற பிள்ளைகளுக்குச் சுமை. வீட்டில் யார் அந்த மொழியைச் சொல்லிக் கொடுப்பார்கள்? எங்கே போய் அந்த மொழியைப் படிப்பது?

அப்படியென்றால், அந்த மொழி தேவையில்லை. இங்கே, பொருள்தான் அறிவு. செயற்கை நுண்ணறிவு போல, டேட்டா சயின்ஸ் போல – அதைச் சொல்லிக் கொடுப்பதற்குத் தமிழ்நாடு அரசு இன்று தொடங்கவில்லை. இந்தப் பழக்கம் எங்கே இருந்து தொடங்கியது என்றால், நீதிக்கட்சி ஆட்சிக்காலத்திலிருந்து தொடங்கியது.

### திராவிட மாடல் அரசின் முக்கிய சாதனை கல்வி!

திராவிட மாடல் அரசின் அனைத்து சாதனைளையும் சொல்லி, ராத்திரிப் பொழுதை சிவராத்திரியாக நான் மாற்ற விரும்பவில்லை.

திராவிட மாடல் அரசின் முக்கிய சாதனைகளில் மிகவும் முக்கியமானது எல்லாருக்குமான கல்வி என்பது தான். அது எங்கே தொடங்கியது என்றால், நீதிக்கட்சிக் காலத்தில், பார்ப்பனர்கள் மட்டுமே படித்துக் கொண்டிருந்த காலத்தில், சர் பிட்டி தியாகராயர் என்பவர், ஏன் மற்ற ஜாதியினர், ஒடுக்கப்பட்ட ஜாதியினர் படிக்க வரமாட்டேன் என்கிறார்கள்? அவர்கள் பசியில் இருக்கிறார்கள்; அவர்கள் வறுமையில இருக்கிறார்கள்; அவர்கள் எல்லாம் வேலைக்குப் போகிறார்கள் என்பதை உணர்ந்த அவர், 1920 ஆம் ஆண்டில், சென்னை மாகாணத்தில் மதிய உணவு வழங்கி, பள்ளிக்கூடத்திற்குப் பிள்ளைகளை வரவழைத்தார்.

உலகத்திலேயே முதன்முதலில், படிக்க வந்தால், சாப்பாடு போடுவோம் என்று சொன்ன முதல் மாகாணம் சென்னை மாகாணம்தான். அதைச் செய்தவர் சர்.பிட்டி தியாகராயர் அவர்கள்தான்.

### உலகமே உற்று நோக்கும் காலை உணவுத் திட்டம்!

எப்படி, இன்றைய முதலமைச்சர் நம்முடைய தலைவர் திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், காலை உணவு வழங்கியபொழுது உலகமே உற்றுப் பார்த்ததோ, அதுபோல, கிட்டத்தட்ட நூறாண்டுகளுக்கு முன்பு, நீதிக்கட்சியைச் சார்ந்த சர்.பிட்டி தியாகராயர் பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கியபோது, உலகமே உற்றுப் பார்த்தது.

மெட்ராஸ் ஸ்டேட்டில், மதிய உணவு அளித்து, பள்ளிக்கூடம் நடத்துகிறார்களா? என்று.

அதுதான், பின்னாளில் பெரியாரால் ஊக்குவிக்கப்பட்டது.

பெரியார் அவர்கள், கல்வி என்பது பெண்களுக்கும் மிக முக்கியம் என்று பேசியவர்.

இன்று பெரியாரை, சீமானில் தொடங்கி, எச்.ராஜாவிலிருந்து அண்ணாமலை வரையில் யாருக்கும் பிடிக்கமாட்டேன் என்கிறதே, அவர் சாமி கும்பிடாதே என்பதற்காகவா? இல்லை.

பெண் பிள்ளைகளைப் படிக்கச் சொன்னதால்தான்.

பெண் பிள்ளைகளை சமமாக நடத்து என்பதால் தான். பெண் பிள்ளைகளுக்குச் சொத்தில் பங்கு கொடு என்பதால்தான். இதையெல்லாம் சொன்ன கிழவன் பெரியார், அதனால் வேண்டாம் பெரியார்.

பெரியார் சொன்னதையே, பின்னாளில் அண்ணா அவர்கள் வலியுறுத்துகிறார்.

பொய்ச் சிரிப்பு புரட்டும் உலவும் நிலவும் உலகில்
நம் வாழ்க்கைப் பாதை நேராக இருக்கவேண்டும் எனில், கல்வியைத் தவிர வேறு வழியில்லை. கல்வியைத் தவிர வேறு கதியில்லை என்கிறார் அண்ணா.

### மதுரை அமெரிக்கன் கல்லூரியில் கலைஞர் பேசியது என்ன?

அண்ணாவின் தொடர்ச்சியாக வந்த கலைஞர், அதை அழுத்திப் பிடித்துக் கொள்கிறார்.

1975 ஆம் ஆண்டு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், மதுரை அமெரிக்கன் கல்லூரியில், தமிழ் மன்றத்திற்குப் பேச்சாளராகப் போகிறார். அவருடன், அன்றைய மின்சாரத் துறை அமைச்சராக இருந்த ஓ.பி.ராமன் அவர்கள். இவர் ஒரு பெரிய வழக்குரைஞர்.

அந்தக் கூட்டத்தில், கலைஞரை வரவேற்றுப் பேசிய அமெரிக்கன் கல்லூரியினுடைய மாணவர் மன்ற செயலாளர் சொல்கிறார், "கலைஞர் ஒரு படிக்காத மேதை!" படிப்பு, ஒருவர் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு ஒன்றும் அத்துணை கட்டாயம் இல்லை என்பதற்கு வாழும் உதாரணம்தான் கலைஞர். அவர் அடைந்திருக்கின்ற உயரம் அளவிட முடியாதது என்று சொல்லி, கவிஞர் கண்ணதாசனின் பாடல் ஒன்றை உதாரணமாகச் சொல்கிறார்.

**வாழை மரம் படித்ததில்லை**
**கனி கொடுக்க மறந்ததா?**
**வான்முகிலும் கற்றதில்லை**
**மழை பொழிய மறந்ததா?**

கற்றதினால் அறிவு பெற்றோர் ஆயிரம் உண்டு
பாடம் படிக்காத மேதைகளும் பாரினில் உண்டு
என்று சொல்லி, கலைஞரைப் பாராட்டுகிறார்.

கலைஞர் உரையாற்றும்போது சொல்கிறார், "தம்பி, என் மேல் கொண்ட அன்பின் காரணமாக, படிக்காத என்னை உயர்த்திப் பேசியிருக்கிறார். அப்படி பேசக்கூடாது. உங்களுக்கு யார் உதாரணம் தெரியுமா? யாரைப் போல நீங்கள் வரவேண்டும் தெரியுமா? இதோ இங்கே மேடையில் அமர்ந்திருக்கின்றாரே, அமைச்சர் ஓ.பி. ராமன், அவரைப் போல நீங்கள் வரவேண்டும். அவர் இக்கல்லூரியின் முன்னாள் மாணவர். அவர், மாநிலத்தில் அதிக மதிப்பெண் பெற்று வெற்றி பெற்றவர். அவர் இந்த மாநிலம் புகழும் வழக்குரைஞர். தன்னுடைய கல்வியின் காரணமாக, இன்று அமைச்சரவையை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றார்.

ஆகவே, நீங்கள் எல்லாம் ஓ.பி.ராமனைப்போலத் தான் வரவேண்டும். நீங்கள் எல்லாம் ஓ.பி.ராமனைத் தான் வழிகாட்டியாக எடுத்துக்கொள்ளவேண்டுமே ஒழிய, என்னை எடுத்துக்கொள்ளக் கூடாது.

ஏனென்றால், விதிவிலக்கு வழிகாட்டியாக ஆகாது என்றார்.

தன்னை புகழ்ந்தால், ஒரு தலைவனுக்குப் பிடிக்கும் அல்லவா! ஆமாம், ஆமாம்! நானெல்லாம் படிக்காமல் முன்னுக்கு வந்தவன். ஓ.பி.ராமனுக்கு மேல் நான்தான் என்று சொல்லியிருக்கவேண்டும் அல்லவா!

### படியுங்கள், படியுங்கள் என்று சொல்லும் முதல்வர்!

ஆனால், அப்படி சொல்லாமல், நீ யாரை வழிகாட்டியாகக் கொள்ளவேண்டும் என்றால், யார் படித்திருக்கின்றார்களோ, அவர்களை வழிகாட்டியாகக் கொள்ளவேண்டும். என்னை வழிகாட்டியாகக் கொள்ளாதே என்று சொன்ன தலைவரின் வழியாகத்தான், 2022, ஜீன் மாதம் 13 ஆம் தேதி, திருவள்ளுவர் மாவட்டத்தில், "எண்ணும் எழுத்தும்" திட்டத்தைத் தொடங்கி வைத்து, நம்முடைய முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் சொன்னார்,

"வாழ்க்கையில் தரம் உயருவதற்கு ஒரே வழி கல்வி மட்டும்தான். படிக்காத ஒருவர், சாதித்தார் என்று யாரை யாவது காட்டினால், படித்ததினால் சாதித்த லட்சம் பேரை நம்மால் காட்ட முடியும். படிக்காமல் ஒருவர் சாதித்தார் என்று சொல்வது, நம்மைச் சூழ்ச்சி வலையில் சிக்க வைப்பது. இவனெல்லாம் படித்துவிட்டானே, என்கிற எரிச்சலில் சொல்வது அது. அதனால், படியுங்கள்! படியுங்கள்!! படியுங்கள்!! என்று சொன்னார் தலைவர் ஸ்டாலின் அவர்கள்.

ஸ்டாலின் அவர்கள், படியுங்கள், படியுங்கள், படியுங்கள் என்று சொன்னது எங்கே இருந்து வந்தது? நீதிக்கட்சியிலிருந்து வருகிறது– 1920 ஆம் ஆண்டிலிருந்து வருகிறது – 2022 ஆம் ஆண்டு.

கிட்டத்தட்ட நூறாண்டுகளாக ஒரு மாநிலம், படிப்பதைப்பற்றியே கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதிலும் குறிப்பாக, பெண்கள் படிப்பதைப்பற்றி.

கலைஞர் அவர்கள், 1989 ஆம் ஆண்டு முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டபொழுது, எட்டாம் வகுப்புவரை ஒரு பெண் படித்தால், அவருடைய திருமணத்திற்கு 5 ஆயிரம் ரூபாய் கொடுப்போம் என்றார்.

செய்தியாளர்கள் எல்லாம் அவரிடம் கேட்டார்கள், "எல்லோருக்கும் 5 ஆயிரம் ரூபாய் கொடுக்கவேண்டியதுதானே? அது என்ன எட்டாம் வகுப்புவரையில் படித்திருந்தால்தான் கொடுப்போம் என்பது?" என்று.

உடனடியாக கலைஞர் அவர்கள், "அப்படியாவது எட்டாம் வகுப்புவரை பெண் பிள்ளைகளைப் படிக்க வைப்பீர்களே, அதற்காகத்தான்" என்றார்.

அதன் பின்னால், அது தாலிக்குத் தங்கமாக மாறியது.

### பெண் பிள்ளைகளை தங்கமாக மாற்ற சிந்திப்பவர்!

பிறகு வந்த நம்முடைய ஸ்டாலின் அவர்கள், தாலிக்குத்தங்கமா கொடுப்பது? இந்தப் பெண் பிள்ளைகளையே தங்கமாக மாற்றவேண்டுமே? எப்படி என்று சிந்தித்தார்.

ஒரு பெண் பிள்ளை நன்றாகப் படித்து, பணிக்குச் சென்று, சம்பாதித்தால், அந்தப் பெண் எத்தனை பவுன் தங்கம் வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம்.

அரசு பள்ளியில் 6 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்புவரை படிக்கும் பெண்களுக்கு, எவ்வளவு படித்தாலும், எவ்வளவு நாள்களுக்குப் படித்தாலும், படிப்பு முடியும்வரை, மாதம் அவர்களுக்கு ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என அறிவித்த ஒரே ஒரு மாநிலம் தமிழ்நாடுதான்.

இன்றைக்குப் பெண்களுக்கான பேருந்து பயணம் பற்றிய புள்ளி விவரங்களை அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார். இத்தனைக் கோடி பேர் பயணம் செய்கிறார்கள் என்பது வேறு.

அந்தப் பேருந்து பயணம் அவர்களுடைய வாழ்க்கையில் எப்படிப்பட்ட மாற்றத்தை ஏற்படுத்தும் தெரியுமா?

எம்.ஜி.ஆர். நகரில் உள்ள, கல்லூரியில் படிக்கின்ற ஒரு பெண், மாலை நேரத்தில், ஓர் அங்காடியில் பணியாற்றலாம் என்று நினைக்கிறார். அப்படி வேலை செய்தால், அவருக்கு 7 அல்லது 8 ஆயிரம் ரூபாய் வரை சம்பளம் கிடைக்கும். ஆனால், அந்தப் பெண், தியாகராயர் நகருக்கோ, பாண்டிபஜாரில் உள்ள கடைக்கோ பணிக்குச் சென்றால், 10 ஆயிரம் ரூபாய் வரை சம்பளம் கிடைக்கும். கூடுதலாக 2 ஆயிரம் ரூபாய் கிடைக்கின்ற வாய்ப்பு இருக்கிறது.

ஆனால், அவருடைய அப்பா என்ன சொல்வார் என்றால், "சுமதி, நீ எதற்கு எம்.ஜி.ஆர். நகரிலிருந்து தியாகராயர் நகருக்கு வேலைக்குச் செல்கிறாய்? பேருந்துக் கட்டணமே ஆயிரத்து 500 ரூபாய் ஆகிவிடும். இங்கேயே பணி செய்தால், சீக்கிரம் வீட்டிற்கும் வந்துவிடலாம்" என்று சொல்கிறார்.

இப்போது அரசு பேருந்தில் இலவச பயணம் என்பதால், அந்தப் பெண், "அப்பா, பேருந்தில் பெண்களுக்கு இலவசம் என்பதால், நான் தியாகராயர் நகருக்கே பணிக்குச் செல்கிறேன்" என்பார்.

தியாகராயர் நகரில் பணி செய்யும் பெண், அங்கேயே பணி செய்துகொண்டிருப்பாரா? அதற்குள் அவருடைய படிப்பும் முடிந்துவிடும். அதற்கடுத்து, சென்னையிலிருந்து மும்பைக்குப் பணிக்குச் செல்வார். அங்கே பணி செய்துகொண்டே, மேற்படிப்புப் படிப்பிற்காக பிரான்சுக்குச் செல்வார்.

அப்படி என்றால், பெண்களுக்குப் பேருந்தில் இலவசம் என்பதால், ஒரு பெண்ணின் வாழ்க்கை, எம்.ஜி.ஆர். நகரிலிருந்து பிரான்சுக்கு மாறுகிறது என்பதால் தான், பெண்களைப் படியுங்கள் என்கிறோம்.

பெண் பிள்ளைகள் படிக்கவேண்டும் என்று அரசு ஏன் கவலைப்படுகிறது? ஒரு ஆண் பிள்ளை படித்தால், அவன் மட்டும்தான் படித்தவனாகிறான். ஆனால், ஒரு பெண் பிள்ளை படித்தால், அந்தத் தலைமுறையே படித்ததற்குச் சமமாகும்.

பெண் பிள்ளைகளைப் படிக்க வையுங்கள். அதனால்தான், ஆறாம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை அரசு பள்ளியில் படிக்கின்ற பெண் பிள்ளைகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் தருகிறோம்.

சரி, 11, 12 ஆம் வகுப்பு படிக்கவில்லை. 10 ஆம் வகுப்பு முடித்து, டிப்ளமோ அல்லது அய்.டி.அய். படிப்பதற்குப் போகிறோம் என்றாலும் பரவாயில்லை. மாதம் ஆயிரம் ரூபாய் படிப்பதற்குக் கொடுக்கின்றோம்.

### இலவச பேருந்து பயணம்!

எனக்கு எம்.ஜி.ஆர். நகர் போன்ற பகுதியில் பேசுவதில் ஒரு மகிழ்ச்சி உண்டு. இங்கே இருக்கின்ற பெண்களுக்கு ஒரு பழக்கம் உண்டு. குழந்தைகளுக்குச் சோறு ஊட்டுவதற்காக வெளியில் வருவார்கள். இதை வேறு எங்கும் பார்க்க முடியாது.

வெளியில் வேடிக்கைக் காட்டிக் கொண்டே குழந்தைக்குச் சோறு ஊட்டுவது ஒரு பெரிய விஷயமா? என்று நீங்கள் எல்லாம் கேட்கலாம். அதில் ஒரு விஷயம் இருக்கிறது. தன் குழந்தைக்கு மட்டும் அந்த அம்மா சோறு ஊட்டமாட்டாள்; கீழே நின்று கொண்டிருக்கும் பக்கத்து வீட்டுப் பிள்ளை, இவருடைய சேலையைப் பிடித்து இழுக்கும். அந்தக் குழந்தைக்கும் சோறு ஊட்டுவாள்.

அதுபோன்று, அரசுப் பள்ளியில் 6 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரையில் படித்த பெண்களுக்குத் தான் மாதம் ஆயிரம் ரூபாய் என்று சொன்ன முதலமைச்சர், அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கின்ற பிள்ளைகள் இதை வேடிக்கைப் பார்த்தார்கள் அல்லவா, அந்தப் பெண் பிள்ளைகளுக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றார்.

### மாணவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய்!

சரி, அடுத்து வேடிக்கைப் பார்த்த பிள்ளை யார் தெரியுமா?

நம்முடைய ஆண் பிள்ளை.

என்னங்க, பெண் பிள்ளைகளுக்கு மட்டும்தானா? நாங்கள் என்ன செய்தோம்? என்று கேட்டார்கள்.

தமிழ்ப் புதல்வன் என்கிற திட்டம்மூலம், சென்ற ஆகஸ்ட் மாதத்திலிருந்து ஆண் பிள்ளைகளுக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் தருகிறார்.

ஒரு மாநிலம், தொடர்ச்சியாக படிப்பவர்களுக்குப் பணம் கொடுத்துக் கொண்டே இருக்கிறது, தொடர்ந்து படி, படி என்று.

அப்படி படிக்க வைத்ததினால், இந்தத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு, இந்தத் 'திராவிட மாடல்' நாயகர் ஆட்சிக்கு வந்த பிறகு, படிக்கின்ற பெண்களின் எண்ணிக்கை 35 விழுக்காடு கூடியிருக்கிறது. 100-க்கு 30 பேர் படித்தார்கள் என்றால், இப்போது 50 பேர் படிக்கிறார்கள்.

இந்த எண்ணிக்கை உயர்ந்ததற்கான காரணம், அவர்களுக்கு ஊக்கத் தொகையாகக் கொடுத்த ஆயிரம் ரூபாய்தான். மூன்றரை லட்சம் பெண்கள் அதிகமாகப் படிக்கிறார்கள்; 2 லட்சம் ஆண்கள் அதிகமாகப் படிக்கிறார்கள் என்றால், அதற்கு இந்த அரசுதான் காரணம்.

### ஒரு எளிய கணக்கு!

உங்களுக்கு ஒரு எளிய கணக்குச் சொல்கிறேன்.

இந்தியாவினுடைய மோடி அரசு, மொத்த இந்தியாவிற்கும் செலவழிக்கும் பணம் 78 ஆயிரத்து 272 கோடி ரூபாய்.

தமிழ்நாட்டிற்கு மட்டும் நாம் செலவழிக்கும் பணம் எவ்வளவு தெரியுமா?

48 ஆயிரம் கோடி ரூபாய்.

மொத்த இந்தியாவிற்கும் 78 ஆயிரத்து 272 கோடி ரூபாய். இதில் நமக்கு 2 ஆயிரம் கோடி ரூபாய் தருவார்கள்.

நம்முடைய முதலமைச்சர் என்ன சொன்னார் தெரியுமா?

நீ கொடுக்கின்ற 2 ஆயிரம் கோடி ரூபாயை நீயே வைத்துக் கொள். எங்கள் பிள்ளைகள் படிப்பதற்கு 48 ஆயிரம் கோடி ரூபாய் தேவை. 2 ஆயிரம் கோடி ரூபாயை நீ கொடுத்துவிட்டு, மூன்றாவது மொழியைப் படிக்கவேண்டும் என்கிறாய். அதெல்லாம் படிக்க முடியாது.

நீங்கள் 10 ஆயிரம் கோடி ரூபாய் கொடுத்தாலும் வேண்டாம். மும்மொழிக் கொள்கையை நாங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம்.

எங்களுடைய பெண் பிள்ளைகளையும், ஆண் பிள்ளைகளையும் படிக்க வைப்போம்.

இந்த மாநிலத்தில் பெண்ணாய்ப் பிறப்பதற்கு மாதவம் செய்திடல் வேண்டும் அம்மா என்று மற்ற மாநிலத்துப் பெண்கள் எல்லாம் பொறாமைப்படும் ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் சொல்கிறார், எனக்கு நீ பணம் தரவேண்டாம் என்று.

இந்தியாவை ஆளும் பாரதீய ஜனதா அரசு, எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறது? எதற்குப் பணம் செலவழிக்கிறது?

தமிழ்நாட்டை ஆண்டு கொண்டிருக்கும் திராவிட மாடல் நாயகர் திரு.முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எதற்குப் பணம் ஒதுக்குகிறார்? எது அவசியம் என்று நினைக்கிறார் என்பதைச் சிந்தித்துப் பார்த்தால், அண்ணன் மா.சு. சொன்னதுபோன்று, வெல்வோம் 200 – படைப்போம் வரலாறு என்பது மட்டுமல்ல, இந்தியாவிற்கே வழிகாட்டியாக நம்முடைய முதலமைச்சர் தலைவர் ஸ்டாலின் அவர்கள் வரப்போகும் நாள் வெகுதூரத்தில் அல்ல; இந்தப் பிறந்த நாளில் மட்டுமல்ல; தொடர்ந்து வரும் பிறந்த நாள்களில் தொடர்ச்சியாக அவரை வாழ்த்துவோம். வாழ்த்துவதில் மகிழ்வோம். வணங்கி மகிழ்கிறேன்.

இவ்வாறு இயக்குனர் கரு.பழனியப்பன் பேசினார்.